பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 03 2021 12 40

புதன்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்-

1. சுயசார்பு இந்தியா இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இளைஞர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
2. கோவிட்-19-க்கான தடுப்பூசியை போடுவதற்கு அனைத்து தனியார் மருந்துவமனைகளுக்கும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
3. ஹரியானா மாநிலத்தில் தனியார் துறைகளில் 75 சதவீத வேலைவாய்ப்புக்களை உள்ளூர் மக்களுக்கு வழங்க வகை செய்யும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
4. உலகவன உயிரினங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை அகமதாபாத்தில் தொடங்குகிறது.

----- *இனி விரிவான செய்திகள்* ---

[]<<<>>>[]

சுயசார்பு இந்தியா இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இளைஞர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய நிதி நிலை அறிக்கையில் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து இன்று காணொலி காட்சி வாயிலாக பிரதமர் உரையாற்றினார்.

கல்வியையும், திறன் மேம்பாட்டையும் சுயசார்பு இந்தியா இயக்கத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

இளைஞர்கள் கல்வி அறிவு மற்றும் திறன் மேம்பாட்டில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் புதிய தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அறிவையும், ஆராய்ச்சியையும் குறுகிய வட்டத்திற்குள் வைத்திருப்பது நாட்டுக்கு இழைக்கும் அநீதியாகும் என்று குறிப்பிட்ட பிரதமர், விவசாயம், விண்வெளி, அணுசக்தி, ராணுவ ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களில் இளைஞர்களை ஈடுபடுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

தேசிய கல்விக் கொள்கையில் அனைத்து இந்திய மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதமர், உலக அளவில் உள்ள சிறந்த கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளை அந்தந்த மொழிகளில் அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

கோவிட்-19-க்கான தடுப்பூசியை போடுவதற்கு அனைத்து தனியார் மருத்துவமனைகளுக்கும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த தடுப்பூசி அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முன்னதாக ஆயுஷ்மான் பாரத் மற்றும் மத்திய மாநில அரசுகளின் மருத்துவ திட்டங்களை நடைமுறைப்படுத்தும் தனியார் மருத்துவமனைகளுக்கு மட்டும் மத்திய அரச அனுமதி அளித்திருந்தது.

கோவிட்-19 தடுப்பு மருந்துகளை தேவையான அளவு மட்டுமே கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று மாநில மற்றும் யுனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

கோவிட்-19 தொற்றிலிருந்து குணமடைந்தோர் வீதம் 97 புள்ளி பூஜ்ஜியம் ஆறு சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 13 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இந்த நோய் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை ஒரு கோடியே எட்டு லட்சத்து 12 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் 15 பேர் இந்த நோய் தொற்றினால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

ஹரியானா மாநிலத்தில் தனியார் துறைகளில் 75 சதவீத வேலைவாய்ப்புக்களை உள்ளூர் மக்களுக்கு வழங்க வகை செய்யும் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

கடந்த ஆண்டு அம்மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவிற்கு, ஆளுநர் திரு சத்யதேவ் நாரயன் ஆரியா நேற்று ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன்படி தனியார் நிறுவனங்களில் மாதம் 50 ஆயிரம் ரூபாய் வரை ஊதியம் உள்ள பணிகளில் உள்ளூர் மக்களுக்கு பணி வழங்க இந்த சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தாத தனியார் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்மாநில அரசு எச்சரித்துள்ளது.

[]<<<>>>[]

குஜராத் மாநிலத்தின் வரும் நிதியாண்டுக்கான காகிதமில்லா நிதி நிலை அறிக்கையை அம்மாநில துணை முதலமைச்சரும், நிதி அமைச்சருமான திரு நிதின் படேல் இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

சட்டமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும், பொதுமக்களும் பட்ஜெட் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு, 'குஜராத் பட்ஜெட்' என்கிற செயலியை அம்மாநில அரசு ஏற்கனவே அறிமுகப்படுத்தியது.

[]<<<>>>[]

எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கையை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அந்த ஆணையத்தின் 46-வது கூட்டம் ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது.

இக்கூட்டத்தில் பேசிய இந்திய பிரதிநிதி திரு பவன்குமார் பாதே, பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்வர்களுக்கு பாகிஸ்தான் அரசு நிதியுதவி வழங்கி வருவதாக குற்றம் சாட்டினார்.

ஐ நா-வால் பயங்கரவாதிகள் என்று பிரகடணம் செய்யப்பட்டவர்களுக்கு பாகிஸ்தான் அரசு ஆதரவளிப்பதுடன், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளில் இன்று தொடங்கிய சர்வதேச கூட்டு விமான பயிற்சியில், இந்திய விமானப்படை முதல் முறையாக பங்கேற்றுள்ளது.

வரும் 27-ஆம் தேதி வரை நடைபெறும் இந்த கூட்டுப் பயிற்சியில் அமெரிக்கா, பிரான்ஸ், சௌதி அரேபியா, தென்கொரியா மற்றும் பஹ்ரைன் நாடுகளும் பங்கேற்றுள்ளன.

[]<<<>>>[]

உலகவன உயிரினங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், வன உயிரினங்களின் பாதுகாப்புக்காக பணியாற்றி வரும் அனைவருக்கும் தமது வணக்கங்களை தெரிவித்துக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

இந்தியாவில் சிங்கம், புலி, சிறுத்தைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகக் கூறியுள்ள பிரதமர், வனங்களையும், வன உயிரினங்களை காப்பதற்கும் மக்கள் அனைத்து வகைகளிலும் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய வனத்துறை அமைச்சர் திரு பிரகாஷ் ஜவடேக்கர் விடுத்துள்ள செய்தியில், வனவிலங்குகளை பாதுகாப்பதில் இந்தியா சிறந்து விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் உள்ள ஆசிய சிங்கங்கள் மற்றும் புலிகளின் எண்ணிக்கையில் 70 சதவீதம் இந்தியாவில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அழிந்து வரும் சிறுத்தை இனங்களை பாதுகாக்க மத்திய அரசு புதிய திட்டம் வகுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் அந்தந்த தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மூலம் வாக்களிக்க தனி வாக்குச்சாவடி அமைக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு வரும் எட்டாம் தேதிக்குள் பதிலளிக்க தேர்தல் ஆணையத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான மனு இன்று தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் பானர்ஜி மற்றும் நீதிபதி திரு செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தபோது, மனு தொடர்பாக விளக்கம் அளிக்க அவகாசம் வழங்க வேண்டுமென்று தேர்தல் ஆணையம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட நீதபதிகள் வரும் எட்டாம் தேதிக்குள் பதிலளிக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டனர்.

[]<<<>>>[]

நாகாலாந்து மாநில அரசு முதல் முறையாக நாட்டில் உள்ள பிற பகுதிகளுக்கு சரக்கு விமான சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

முதலமைச்சர் திரு **neiphiurio** இந்த விமான சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நாகாலாந்து தோட்டக்கலைத் துறை, இந்திய விமான ஆணையம், ஏர் இண்டியா, இண்டிகோ ஆகியவை இணைந்து இந்த சரக்கு விமான சேவையை தொடங்கி உள்ளன.

இதற்காக தனியாக ஒரு சரக்கு சேவை முனையம் அமைக்கப்படும் என்று இந்திய விமான ஆணையத்தின் மண்டல செயல் இயக்குநர் திரு சுரேஷ் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரின் லடாக் மற்றும் கார்கில் பகுதிகளில் எற்பட்ட பனிப்பொழிவு மற்றும் கடும் குளிரால் பாதிக்கப்பட்டிருந்த மூவாயிரத்து 500-க்கும் மேற்பட்ட மக்களை இந்திய விமானப்படைமீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முதல் முறையாக இந்திய விமானப்படையின் சீனூக் ஹெலிகாப்டர் இந்த மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீநகர் மற்றும் ஜம்முவிலிருந்து ஆயிரத்து 537 பேர் கார்கில்-க்கும் அழைத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர்கள் மாணவர்கள் மற்றும் சிகிச்சைக்காக சென்ற மக்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலத்தில் திரணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மற்றும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அக்கட்சியிலிருந்து விலகி பிஜேபி-யில் இணைந்தார்.

அம்மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜிதேந்திர திவாரி, பிஜேபி-யில் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

[]<<<>>>[]

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான நான்காவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை அகமதாபாத்தில் தொடங்குகிறது.

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா இரண்டுக்கு – ஒன்று என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

[]<<<>>>[]

இந்தியா – ஜெர்மனி இடையிலான இரண்டாவது ஆடவர் ஹாக்கிப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் ட்டிரா ஆனது.

[]<<<>>>[]

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி இணை முதல் செட்டில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஆட்டத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த், மற்றொரு இந்திய வீரர் சமீர் வர்மாவை எதிர் கொள்கிறார்.

ஹெச் எஸ் பிரணாய் - நெதர்லாந்து வீரர் **Mark caljouw -** வை எதிர்கொள்கிறார்.

சவ்ரவ் வர்மா **–** சுவிட்சர்லாந்து வீரர் **Christinan Kirchmayr** - ஐயும், அஜய் ஜெயராமன் - தாய்லாந்தின் **Thammasin –** யும் எதிர்கொள்கின்றனர்.

மகளிர் பிரிவில் பி வி சிந்து **–** துருக்கியின் **Neslihan Yigit–**யையும், சாய்னா நேவால் - தாய்லாந்தின் **Chaiwan –** ஐயும் சந்திக்கின்றனர்.

**[]<<<>>>[]**

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெறும் உலகக்கோப்பைக்கான துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்திய வீராங்கனை மனிஷா கீர் ட்ராப் பிரிவில் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

**[]<<<>>>[]**